(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் 9 முதல் 14 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிமுகம் செய்த பிறகு கொடுங்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிமுகம் செய்துவிடுகிறேன். உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த Bill-க்கா; இதற்கா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நபர் ஒருவரைப் புதைக்கிற சட்டம். (குறுக்கீடுகள்). அது முடிந்துவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். அது முடிந்துவிட்டது. வாக்கெடுப்புக்கு விட்டு அது நிறைவேறிவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். இப்போது நீங்கள் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக்கோருகிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இது நிராகரிப்புத் தீர்மானம் இல்லை. எதிர்க்கிறேன் என்று மட்டும்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பேசக்கூடாது.*